**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 78/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 3/PW- 3 |
| Name | : திரு. சூர்யா |
| Father/Husband's Name | : தாமோதரன் |
| Village | : பஜனை கோயில் தெரு |
| Taluk | : பெரும்பாக்கம், பாலூர் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பெரும்பாக்கம், பாலூரில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். செந்தில் என்பவர் சண்டை நடந்ததாகவும் அதை நான் பார்த்ததாகவும் கூறியுள்ளார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என்ன செய்தார் என்று தெரியாது. சண்டை நடந்த விவரமே எனக்கு தெரியாது. போலிசார் என்னை நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று கூறினார்கள் எதற்காக என்று கேட்டதற்கு செந்தில் என்பவரை இரவிக்குமார் தாக்கிவிட்டதாக வழக்கு கொடுத்துள்ளதாகவும் அதற்கு வரவேண்டும் என்று கூறினார். சண்டை நடந்த அன்று நான் ஊரிலேயே இல்லை எனக்கு அதை பற்றி தெரியாது. சண்டையில் யாருக்கு என்ன ஆனது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது 19.10.2021 இரவு 09.00 மணி என்று சொன்னால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடம் புகார்தாரர் மீனா என்பவரின் வீட்டிற்கு வெளியே என்று சொன்னால் எனக்கு தெரியாது அவர் வேறு தெரு நான் வேறு தெரு. ரவி செந்தில்குமாரையும் அவரது மனைவி மீனாவையும் அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. ரவி செந்தில்குமாரை புருவத்தில் கத்தியால் தாக்கியதை நான் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல அதை பற்றி எனக்கு தெரியாது. காயம்பட்ட நபரை நாங்கள் சேர்ந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றாலும், மறு நாள் என்னை போலிசார் விசாரணை செய்தார்கள் என்று சொன்னாலும் சரியல்ல. எதிரி எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.